මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல. PRE/2024/85** **2024.09.17**

**சனாதிபதித் தேர்தல் - 2024 செப்தெம்பர் 21**

**சனாதிபதி வேட்பாளர் திரு. அய்துருஸ் முஹம்மது இல்யாஸ் அவர்களின் இறப்பெய்தல்.**

2024 செப்தெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தல்களுக்காக 2024.08.15 ஆம் திகதி பெயர்குறித்து நியமனம் செய்த, 2397/57 ஆம் இலக்க மற்றும் 2024.08.15 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் சனாதிபதி வேட்பாளராக பிரசித்தப்படுத்தப்பட்ட, திரு. அய்துரூஸ் முஹம்மது இல்யாஸ் அவர்கள் 2024.08.22 ஆம் திகதி இறப்பெய்தியுள்ளார்.

இவ்விறப்பெய்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு திருப்தியடைவதன் அடிப்படையில் அவ்வேட்பாளரை பெயர்குறித்து நியமித்த நபரான திரு. கே.எம்.என். சஞ்சய சம்பத் ரேமன் அவர்களுக்கு, வேறு வேட்பாளரொருவரை பெயர்குறித்து நியமிக்கும்படி, 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 22(1) உப பிரிவிற்கமைய கட்டளை இடப்பட்டதுடன் அவரால், கட்டளையிட்ட நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள் வேறு வேட்பாளரொருவரை பெயர்குறித்து நியமனத்தைச் செய்யத் தவறியுள்ளார்.

அச்சட்டத்தின் 22(1) (ஆ) உப பிரிவிற்கமைய வாக்குச் சீட்டு மற்றும் வாக்கெடுப்புக்குரிய ஏனைய அனைத்து ஆவணங்களிலும் இறப்பெய்திய வேட்பாளரின் பெயர் நீக்கப்பட்டுள்ளதென்பதாகக் கருதப்படுமெனவும், திரு. அய்துரூஸ் முஹம்மது இல்யாஸ் அவர்களுக்கு வாக்கை அடையாளமிட்டிருப்பின் அது நிராகரிக்கப்பட வேண்டிய வாக்குச் சீட்டாகக் கருதப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழுவுக்காக)